**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 13 பெப்ரவரி 2018

Good Food, Good Life

## நெஸ்லே அறிமுகப்படுத்தும் *Nespray Coco-Up*: இலங்கையில் முதன்முறையாக தேங்காயுடனான பால் பானம்

உள்நாட்டில் பெறப்படும் நலச்செழுமை மிக்க புத்தம்புதிய பால் மற்றும் தேங்காயின் புத்துணர்ச்சியளிக்கும் அற்புத சுவை கொண்ட புத்தாக்கமான ஒரு தயாரிப்பு

நலச்செழுமை மிக்க *Nespray* பால் மற்றும் தேங்காயின் புத்துணர்வூட்டும் சுவை ஆகியவற்றின் இணைப்பாக வெளிவந்துள்ள *Nespray Coco-Up* உடனடி பானம் (Ready-to-Drink - RTD) நெஸ்லே நிறுவனத்தின் சமீபத்தைய புத்தாக்கமாக அமைந்துள்ளது. பால் மற்றும் அற்புதமான, இலேசான கடலைப்பருப்பு சுவையைக் கொண்டுள்ள *Nespray Coco-Up*, இலங்கையில் உற்பத்தியாகும் பால் மற்றும் தேங்காயைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. செயற்கை நிறமூட்டிகளோ, பதப்படுத்திகளோ சேர்க்கப்படாது, மேம்படுத்தப்பட்ட தேங்காய்ச்சாற்றுடன் பாலை மூலமாகக் கொண்ட பான வகையாக, இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச அளவில் நெஸ்லே நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த வகையிலான முதலாவது உற்பத்தியாகவும் திகழ்கின்றது.

இலங்கையிலும், உலகெங்கிலும் முக்கியமான ஒரு உணவாகக் காணப்படுகின்ற தேங்காய், எந்த வகையான உணவுக்கும் அல்லது பானத்திற்கும் தனித்துவமான மற்றும் புத்துணர்ச்சியளிக்கும் சுவையைச் சேர்ப்பிக்கின்றது. அதே நேரம், பாலை எடுத்துக் கொண்டால், அது இயற்கையாகவே கல்சியச் சத்தின் செழுமை நிரம்பியதுடன், சிறுவர்களின் உணவில் வளர்ச்சி மற்றும் விருத்திக்கு அத்தியாவசியமான முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. அவ்வாறான இரு முக்கியமான உணவு வகைகளை சேர்க்கைப் பொருட்களாக ஒன்றிணைத்து, சிறுவர்கள் பாலை அருந்தி மகிழ்வதற்கு இன்னும் அதிகமான வழிமுறைகளைத் தோற்றுவித்து அவர்களுக்கு வழங்குவதற்காக நெஸ்லே நிறுவனம் தனது பிரதான பால் வர்த்தகநாமமான *Nespray* மூலமாக தனித்துவமான இந்த உற்பத்தியை தோற்றுவித்துள்ளது.

நெஸ்லே நிறுவனத்தின் பாலுணவு உற்பத்திப் பிரிவின் பிரதித் தலைமை அதிகாரியான ருவான் வெலிக்கல அவர்கள் கூறுகையில்: *"எப்போதும் அன்னையரின் நம்பிக்கையை வென்றெடுத்துள்ள ஒரு பால் வர்த்தகநாமமான நெஸ்பிறே, அவர்களது பிள்ளைகளுக்கு வலுவான ஊட்டச்சத்துக்கான அத்திவாரத்தை வழங்கிவருகின்றது. சிறுவர்களின் பல்வேறுபட்ட சுவைகள் மற்றும் தேவைகளை ஈடுசெய்யும் வகையில் பல்வேறுபட்ட உள்நாட்டு பால் உற்பத்திகளை அது வழங்கி வருகின்றது. புத்தம்புதிய பால் மற்றும் தேங்காய் ஆகியவற்றின் புத்தாக்கமான தயாரிப்பில் வெளிவந்துள்ள Nespray Coco-Up, அது வழங்கும் தனித்துவமான நுகர்வோர் அனுபவத்துடன் எமது வலுவான உற்பத்தி வரிசையில் இணைந்துள்ளதுடன், சிறுவர்களைப் பொறுத்தவரையில் பாலை அருந்துவதை வேடிக்கை, சாகசம் மற்றும் புத்துணர்வூட்டும் அனுபவமாக மாற்றியமைக்கின்றது,"* என்று குறிப்பிட்டார்.

உலகில் முன்னிலை வகித்து வருகின்ற நெஸ்லே அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் எண்ணக்கருவில் உதித்த இந்த உற்பத்தி, சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து, பால் மற்றும் தேங்காய் பதனீடு ஆகியவற்றில் நிறுவனம் கொண்டுள்ள நிபுணத்துவத்தின் அறுவடைப் பயனாகும். விற்பனைப் பெறுமானத்தைப் பொறுத்தவரையில் உலகிலேயே மிகவும் பாரிய பால் உற்பத்தி நிறுவனமாக நெஸ்லே திகழ்ந்து வருவதுடன், இலங்கையில் புத்தம்புதிய பாலை மிகவும் அதிகளவில் கொள்வனவு செய்கின்ற தனியார் துறை நிறுவனமாக, தினந்தோறும் 20,000 வரையான உள்நாட்டுப் பண்ணையாளர்களிடமிருந்து பாலைக் கொள்வனவு செய்து வருகின்றது. பாலை மூலமாகக் கொண்ட பான வகை உற்பத்திகளைப் பொறுத்தவரையில் இந்நிறுவனம் உள்நாட்டில் சந்தை முன்னோடியாகத் திகழ்ந்து வருவதுடன், 1984 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பால் உற்பத்திகளை தயாரித்து வருகின்றது.

உலகில் தேய்காய்ப் பால்மா ஏற்றுமதியில் மிகவும் பாரிய நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்ந்து வருகின்ற நெஸ்லே, தனது வர்த்தக நடவடிக்கைகள் மூலமாக உள்நாட்டிலுள்ள 6,000 இற்கும் மேற்பட்ட தெங்குத் தோட்டக்காரர்களின் வாழ்வாதாரத்திற்கு நற்பயனளித்து வருகின்றது. அதன்

நெஸ்லே தெங்கு அபிவிருத்தித் திட்டமானது தெங்குத் தோட்டச் செய்கையில் புதிதாக ஈடுபடுகின்றவர்கள் மற்றும் தமது வீடுகளில் தென்னை மரங்களை வளர்ப்பவர்களையும் வெற்றிகரமாக தேங்காய் உற்பத்தியை முன்னெடுக்க உதவி வருகின்றது. 1980 களில் இருந்து குருணாகலிலுள்ள தனது தொழிற்சாலையில் தேங்காய்ப் பால் மாவை உற்பத்தி செய்து வருகின்ற நிறுவனம், இலங்கையிலிருந்து பெறப்படுகின்ற தேங்காயை மட்டுமே உபயோகித்து அவற்றைத் தயாரிப்பதுடன், உலகளாவில் நெஸ்லே சந்தைகளுக்கு அவற்றை வழங்கி வருகின்றது.

நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில்: *“150 ஆண்டுகளுக்கு முன்னர் எமது நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட காலம் முதற்கொண்டே புத்தாக்கம் என்பது எமது மரபணுவாகவே காணப்படுகின்றது. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்ற புத்தாக்கமான, விஞ்ஞான அடிப்படையிலான உற்பத்திகள் மற்றும் சேவைகளை நாம் இன்றும் தொடர்ந்து வழங்கி வருகின்றோம். உள்நாட்டில் பெறப்படுகின்ற புத்தம்புதிய பாலை உபயோகித்துத் தயாரிக்கப்படுகின்ற பல்வேறு உற்பத்திகளை உள்நாட்டிலுள்ள எமது நுகர்வோருக்கு வழங்குவதையிட்டு நாம் பெருமை கொள்வதுடன், அந்த வரிசையில் தேங்காயின் தனித்துவமான இணைப்புடன் Nespray Coco-Up இனை தற்போது அறிமுகப்படுத்தியுள்ளோம். அதிநவீன சர்வதேச தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை உபயோகித்து, உள்நாட்டில் பெறப்படுகின்ற மூலப்பொருட்கள் மற்றும் உள்நாட்டு நுகர்வோர் தொடர்பான ஆழமான புரிந்துணர்வுடன் உள்நாட்டுப் புத்தாக்கத்துடன் தயாரிக்கப்படுகின்ற அதிசிறந்த உற்பத்திகள் ஆகியவற்றின் தனித்துவமான இணைப்பானது இலங்கையில் நெஸ்லே நிறுவனத்தின் புத்தாக்கத்தை அச்சொட்டாகப் பிரதிபலிக்கின்றது,”* என்று குறிப்பிட்டார்.

நன்கு குளிரூட்டப்பட்ட நிலையில் மிகச் சிறந்த நுகர்வு அனுபவத்தைத் தருகின்ற *Nespray Coco-Up* ரூபா 60 என்ற விலையில் நாடெங்கிலுமுள்ள முன்னணி சுப்பர்மார்க்கட்டுக்களில் கிடைக்கப்பெறுகின்றது. உள்நாட்டுப் பாலைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற *Nespray* உற்பத்திகளான *Nespray* Fortigrow, *Nespray* Everyday மற்றும் *Nespray* Nutri-Up உடன் தற்போது *Nespray Coco-Up* உற்பத்தியும் இணைந்து கொண்டுள்ளது.